மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

அ.வ.எண். 23/2021

வாசா. 1

தேதி :- 7.12.2021

பெயர் :- ஆறுமுகம்

1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10வது பிரிவின் படி 2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் தேதி 7 ஆம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

என் தகப்பனாருக்கு சுமாராக 85 வயது இருக்கும். என் தகப்பனார் 100 நாள் வேலை திட்டத்தில் வேலை செய்கிறார் என்றால் சரியல்ல, கடந்த ஒரு மாதமாக படுத்த படுக்கையாக உள்ளார். வழக்கு சொத்து நஞ்சை நிலம். நஞ்சை நிலம் என்று பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண் என்னவென்றால் சர்வே எண்.60/1 ஆகும். மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் 90 செண்ட் ஆகும். 90 செண்ட் தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் பூர்விக சொத்து ஆகும். தபசில் 2வது எடுப்பு செண்ட் 90 என்று சொல்லியுள்ளேன் என்றால் 2வது எடுப்பு என்று சொல்லவில்லை. என் தகப்பனாரின் தகப்பனார் பெயர் கந்தன். கந்தன் உடன்பிறந்தவர்கள் சுடலைமுத்து, சிவன், வேலாயுதம் ஆகிய மூவர். கந்தனின் தகப்பனார் பெயர் என்னவென்றால் குட்டையன் என்ற சுடலைமுத்து. குட்டையன் என்ற சுடலைமுத்து என்பவருக்கு 3 பங்காளிகள். சுடலைமுத்து என்ற குட்டையன் உடன்பிறந்தவர்கள் பலவேசன் என்ற செம்பட்டையன். கந்தன் உடன்பிறந்தவர்கள் 4 பேர். சுப்பன், வக்கட்டையன், கந்தன், ஆறுமுகம் ஆகிய நான்கு பேர். பலவேசன் என்ற செம்பட்டையானுக்கு சுடலைமுத்து, மாடசாமி, செல்லையா ஆகிய மூன்று பேர் பிள்ளைகள். பலவேசன் என்ற செம்பட்டையனும், சுடலைமுத்து என்ற குட்டையனும் உடன்பிறந்தவர்கள் அவர்கள் தகப்பனார் பெயர் மாடன் ஆவார். பலவேசன் என்ற செம்பட்டையன் மகன் சுடலைமுத்துக்கு சண்முகம், சுப்பையா, பலவேசம், ஐயாகுட்டி. வாதி,

பிரதிவாதி ஆகியோரின் மூதாதையர் மாடன். மாடனின் வாரிசுகள் தான் வாதியும் பிரதிவாதிகள் என்றால் சரிதான். பிரதிவாதிகளின் பங்களிகள் 3 பேர். சொத்துகள் அனைத்தையும் எப்போது பாகபிரிவினை செய்தோம் என்றால் எங்கள் சொத்துகள் மாறி மாறி சர்வே எண்ணில் காணப்படுகிறது. வழக்கு சொத்து 90 செண்டையும் நாங்களும் பிரதிவாதிகளும் அனுபவித்து வருகிறோம். நாங்கள் 90 செண்டை பிரதிவாதியின் முன்னோர்களுக்கு 1990ல் அடமானம் கொடுத்ததில் பிரதிவாதிகளின் தகப்பனார் 'பலவேசம் தான் அனுபவித்து வருகிறார்கள். பிராது படி சொத்துகள் கிடையாது தற்போது உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண்.60ல் 1ஏக்கர் 48 செண்ட் என்று சர்வே எண் கிடையாது என்றால் சரியல்ல. சர்வே எண்.60/1ல் 71 செண்ட் பூமியில் கிடையாது என்றால் சரியல்ல. சர்வே எண்.61/2ல் ஏக்கர் 1 செண்ட் 61 என்று தனியாக பூமியில் சொத்து கிடையாது என்றால் சரியல்ல. 3 ஏக்கர் 80 செண்ட் யாருக்கு பங்கு என்றால் எங்களுக்கு தான் பாத்தியம். 90 செண்ட் எனக்கு தான் பாத்தியம் என்பதற்கு பட்டா, ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்யலாமா என்றால் பட்டா மற்றும் ஆவணங்கள் இல்லை. அடமான ஆவணம் மட்டும் தான் உள்ளது. பிராது சொத்து 90 செண்ட்டுக்கு கிழக்கு பக்கம் பலவேசம் மகன் 1வது பிரதிவாதி சுடலைமுத்து இடம், தெற்கு பக்கம் மாயாண்டி தேவர் பாத்தியப்பட்டது அதை சுடலைமுத்து தான் வாங்கியுள்ளது. வடக்கு பக்கம் ஆவுடையப்பன் இடம், மேற்கு பக்கம் சமுத்திரம் இடம். சுப்பையா மகன் செல்லதுரைக்கு முருகன்புரம் ஊர் என்றால் சரிதான். வேலாயுதம் பலவேசத்திற்கு எழுதி கொடுத்த அடமானத்திற்கு யார் சாட்சி கையொப்பம் போட்டார் என்றால் யாரும் போடவில்லை, 1990ல் எழுதி கொடுத்தார். எனக்கு கையெழுத்து போட தெரியாது கைநாட்டு மட்டுமே செய்வேன். நானும் என் தகப்பனாரும் சேர்ந்து பலவேசம் மகன் சுடலைமுத்துக்கு 29.4.2001ல் வழக்கு சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து ஜெனரல் பவர் பத்திரம் கொடுத்துள்ளோம் என்றால் இல்லை. 29.4.2001ல் அயன் நஞ்சை சர்வே எண்.60/4, 60/12, 61/2D, 61/2E ஆக மொத்தம் 12.5 ஏர் (39 செண்ட்) 1ம் பிரதிவாதிக்கு

ஜெனரல் பவர் பத்திரம் எழுதி கொடுத்தோம் என்றால் சரியல்ல. அந்த பவர் பத்திரத்தில் என் கைரேகையும் என் தகப்பனார் கைரேகையும் உள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு இல்லை என்று சாட்சியம் அளித்தார். இந்த ஆவணத்தில் உள்ள கைரேகையை ஒப்பிட்டு பார்க்க நிபுனர்க்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. எங்கள் ஊரில் ஒரு செண்ட் ரூ.40,000க்கு விற்பனை ஆகிறது. 1990ல் 1 ஏக்கர் நிலம் எவ்வளவு என்றால் தெரியவில்லை. சர்வே எண்.63, 76, 65 61 ஆகிய சர்வே எண்கள் மொத்தம் 2 ஏக்கர் 6 செண்ட் 31.3.1992ல் ரூ.5000க்கு தான் விலைக்கு விற்பனையானது என்றால் தெரியாது. சர்வே எண்.61/1A 23 செண்ட் 6.2.2008ல் 13,800 ரூபாய்க்கு தான் விற்பனையானது என்றால் தெரியாது. பிராது தபசில் 90 செண்ட் ரூ.6000க்கு விற்பனை விலையைவிட 1990ல் அதிகமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1990ல் ஒரு ஏக்கர் ரூ.2000க்கு தான் விலைக்கு போனது என்றால் சரிதான். ரூ.6000க்கு பிரதிவாதியின் தகப்பனாருக்கு வட்டி கொடுத்ததற்கு ரசீது வைத்துள்ளேனா என்றால் 1990லிருந்து பலவேசம் தான் பயிர் செய்து வருகிறார் அதனால் வட்டி கொடுக்கவில்லை. பிராதில் வட்டி கொடுத்ததாக சொல்லியிருந்தால் தவறு என்றால் நான் சொல்லியுள்ளேன். நான் உண்மைக்கு புறம்பாக பிராது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தை வட்டியும் முதலும் சேர்த்து 7000 வந்ததர் 29.4.2001ல் 1வது பிரதிவாதிக்கு நானும் என் தகப்பனாரும் பவர் பத்திரம் எழுதி கொடுத்தோம் என்றால் சரியல்ல. தபசில் சொத்தை ரூ.10,000க்கு கிரையம் பேசி 29.4.2001ல் வட்டியும் முதலும் சேர்த்து ரூ.7000 போக மீதி ரூ.3000 பெற்று கொண்டு எதிர்வழக்குரை தபசில் சொத்தினை 1வது பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தபசில் சொத்தை அவர் சகோதரர் 2, 3 பிரதிவாதிகளுக்கும் 1வது பிரதிவாதி சின்னதுரைக்கம் 24.4.2006ல் கிரைய ஒப்பந்தம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரை தபசில் சொத்து 2001லிருந்து எந்தவித சட்டபடி அனுபவம் உரிமை கிடையாது என்றால் சரியல்ல. எதிர்வழக்கரையில் உள்ள 31

*செண்ட் போக மீதி 59 செண்ட் வேறு நபர்கள் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கிற்கு சின்னதுரை மற்றும் 51 செண்ட்டை அனுபவிப்பர்களும் வழக்கிற்கு தேவையான நபர்கள் என்றால் சரியல்ல. தபசில் சொத்தின் அளவு, எல்கைமால் தவறானவை என்றால் சரியல்ல. அடமான தொகையை உள்ளடக்கி தபசில் எதிர்வழக்குரை 31 செண்ட்டை என் ஜெனரல் பவர் ஏஜெண்ட் கிரைய ஒப்பந்தம் செய்து கொடுத்துவிட்டதால் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நானும் பிரதிவாதிகளும் நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். நானும் என் தகப்பனாரும் நெருங்கிய உறவினர் என்பதால் 29.4.2001 ஜெனரல் பவர் பத்திரத்தின் படி 1வது பிரதிவாதி கிரைய பத்திரத்தை பதிவு செய்யாமல் நாளைய தேதி வரை இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் 2.1.2021 அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு சாட்சிகள் முன்னிலையில் பிரதிவாதிகள் என்னை அழைத்து கிரையம் செய்து கொடுத்த எதிர்வழக்குரை தபசில் சொத்தை பொறுத்து ஏன் பிரச்சனை செய்தீர்கள் என்று கேட்டார்கள் என்றால் சரியல்ல. அப்போது என் தகப்பனார் என் தூண்டுதலின் பேரில் தெரியாமல் அறிவிப்பு அனுப்பியதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான் என் தகப்பனார் மீது பாகபிரிவினை கேட்டு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் அனுப்பினேன்.அது சொத்து விற்க கூடாது என்பதற்கு அனுப்பினேன். 14.3.2012ல் நான் பாகபிரிவினை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சல் உறையும் பிரதிவாதியிடம் கொடுத்து நான் சொத்து பிரச்சனை தொடர்பாக வரமாட்டேன் என்று கூறினார் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு போட்ட விவரம் என் தகப்பனாருக்கு தெரியாது நான் தனிபட்ட விரோதத்தின் காரணமாக தான் எதிர்வழக்குரையில் உள்ள சொத்தை பிரதிவாதியிடமிருந்து அபகரிக்க வேண்டும் என்பதற்காக தான் தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் எதிர்வழக்குரையில் உள்ள தபசில் சொத்தை பிரதிவாதிகள் பதிவு செய்வதற்கு வாதியின் ஆயுள் சான்றுதேவைப்பட்டதால் அதை தாங்களும் தாங்களின் தகப்பனாரும் சான்றிதழ் வாங்கிதருவதாக கூறி தாவா வழக்கு தாக்கல்*

செய்துள்ளோம் 'என்றால் சரியல்ல. என் செயல் மோசடியானது மற்றும் சட்டவிரோதமானது என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையின் தபசில் சொத்து 24.9.2001 ஜெனரல் பத்திரத்தின் படியும் 24.4.2006 கிரைய ஒப்பந்தம் படி 2, 3 பிரதிவாதிகள் மற்றும் சின்னதுரை என்பவருக்கும் என் தகப்பனார் கிரைய ஒப்பந்தம் பதிய கடமைபட்டுள்ளார் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் 2, 3 பிரதிவாதிகள் மற்றும் சின்னதுரை வாழை பயிர் செய்துள்ளார் என்றால் 10 வருடமாக வாழை பயிர் சயெ்தார். வாழைக்கு முன்பு நெல் பயிர் செய்தார் என்றால் 1990லிருந்து பிரதிவாதிகள் பயிர் செய்து வருகிறார்கள். பிராதில் சொல்லியுள்ள படி 2009லிருந்து தான் பயிர் செய்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அடமானத்தை மீட்க என் தந்தைக்கு சட்டபடியான கால அவகாசம் உள்ளதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் அடமான தொகை ரு.6000 கொடுப்பதாக எந்த காலத்திலும் நானோ என் தகப்பனாரோ கூறியது கிடையாது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியது கிடையாது என்றால் சரியல்ல.